ஐங்குறுநூற்றில் இயற்கை

முனைவர் ஜா.சாந்திபாய்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), பெருமாள்புரம், திருநெல்வேலி

ஸ். டெபிஷா ஜெஸ்லின்
முதுகலை இரண்டாமாண்டு, தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), பெருமாள்புரம், திருநெல்வேலி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220386

முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் மனிதனின் தொன்மையான சமூக வாழ்க்கை, பொருளாதார அமைப்பு, பண்பாட்டு வளர்ச்சி மற்றும் சூழல் அறிவை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன. அவற்றுள் அகப்பொருள் இலக்கியமாக விளங்கும் ஐங்குறுநூறு, மனித உணர்வுகளையும், இயற்கை நிலப்பரப்புகளையும் ஒருங்கிணைத்து எடுத்துரைக்கும் தனித்துவமான பண்பு கொண்டதாக விளங்குகின்றது. மானுட சமூகம் தோன்றுவதற்கு முன்பே இயற்கை தன்னிறைவு பெற்ற அமைப்பாக விளங்கியது. மனிதன் தோன்றிய பின்னரும் அவன் வாழ்வு, உணவு, உடை, இருப்பிடம், பண்பாடு, உணர்ச்சி என அனைத்திற்கும் இயற்கையை அடித்தளமாக அமைந்தது. சங்க இலக்கியங்கள் இயற்கையை வெறும் காட்சிப் பொருளாக மட்டும் அல்லாமல், மனித உணர்வுகளோடு கலந்த வாழ்வியல் சூழலாக எடுத்துரைக்கின்றன. குறிப்பாக ஐங்குறுநூறு, ஐந்து நிலப்பரப்புகளின் இயற்கைச் சிறப்புகளை மிக நுணுக்கமாக சித்தரித்து, தமிழரின் சுற்றுச்சூழல் அறிவையும் அழகுணர்வையும் வெளிப்படுத்துகிறது. ஆகவே, "ஐங்குறுநூற்றில் இயற்கை" என்ற தலைப்பில் ஆராய்வது பண்டைய தமிழரின் சூழலியல் சிந்தனையை அறிய உதவுகிறது.

ஐங்குறுநூறு-ஒரு அறிமுகம்

எட்டுத்தொகை நூல்களில் தனித்துவமான இடத்தைப் பெற்ற அகநூல்களில் ஒன்றாக ஐங்குறுநூறு விளங்குகிறது. சங்ககாலத் தமிழரின் காதல் உணர்வுகளையும், இயற்கைச் சூழலோடு பின்னிப்பிணைந்த வாழ்க்கை முறைகளையும் நுணுக்கமாக எடுத்துரைக்கும் சிறப்புமிக்க நூலாக இந்நூல் கருதப்படுகிறது. "திணை" என்னும் இயற்கை அடிப்படைக் கோட்பாட்டை மையமாகக் கொண்டு அமைந்த இலக்கியமாக இருப்பதால், இது தமிழரின் சுற்றுச்சூழல் அறிவையும், பண்பாட்டு ஆழத்தையும் வெளிப்படுத்துகிறது. மேலும் இந்நூல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து நிலப்பரப்புகளுக்காக ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் அமைந்ததால், ஐங்குறுநூறு எனப் பெயர்பெற்றது. ஒவ்வொரு திணையும் தனித்த இயற்கை அமைப்பு, காலநிலை, உயிரினங்கள், மனித உணர்ச்சி நிலை ஆகியவற்றோடு தொடர்பு படுத்திப் பாடப்பட்டுள்ளது. இதனால், ஐங்குறுநூறு வெறும் காதல் இலக்கியமாக மட்டுமல்லாமல், பண்டைய தமிழரின் புவியியல் அறிவு, இயற்கைச் சூழலைப் புரிதல், வாழ்வியல் நெறி ஆகியவற்றை பதிவு செய்த ஆவணமாக விளங்குகிறது.

ஐந்திணை அமைப்பு

சங்க இலக்கியங்களில் காணப்படும் முக்கிய இலக்கிய கோட்பாடுகளில் ஒன்றாக "திணை"

என்னும் பகுப்பு முறை விளங்குகிறது. மனித வாழ்க்கை இயற்கைச் சூழலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதிலிருந்து இக்கோட்பாடு உருவானது. நிலப்பரப்பு, காலநிலை, உயிரினங்கள், தொழில், மனித உணர்வு போன்ற அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்ற உண்மையை தமிழர்கள் அறிந்திருந்தனர். எனவே சங்கத் தமிழர்கள் இயற்கையோடு அமைந்த நிலப்பகுப்பை அதன் இயல்பிற்கு ஏற்ப,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்று தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் தொல்காப்பியர் நிலத்தையும் அதன் தெய்வங்களையும் வகைப்படுத்திக் கூறியுள்ளார். மலைகள் சூழ்ந்த பகுதி குறிஞ்சியாகவும், காடுகள் சார்ந்த பசுமையை முல்லையாகவும் நீர்நிலைகள் நிறைந்த வயல்வெளிகளை மருதமாகவும் கடல் சார்ந்த பகுதிகளை நெய்தலாகவும், பாகுபடுத்தி "நன்னிலம்" என்று கூறினர். மேலும், பருவ மாறுதல்களால் முல்லையும் குறிஞ்சியும் வளம் குறைந்து பாலை நிலமாகும் நிலையை,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உற்றுப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இவ்வாறு பகுக்கப்பட்ட திணைகளுக்கு கருப்பொருளை,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தியாழின் பகுதியொடு தொகை,"

என்று தொல்காப்பியர் கூறுவார். இதன் அடிப்படையில் மக்கள, விலங்கு, பறவை, ஊர், நீர், புஇ மரம், உணவு, பறை, யாழ, பண, தொழ, உணவு, உடை, உறைவிடம, தொழில, தெய்வ வழிபாடு, அகவொழுக்கம், நம்பிக்கை, பழக்கவழக்கம் போன்றவற்றை இச்சூழலுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டனர். எனவேஐந்திணைகளின் அமைப்புதமிழரின் சுற்றுச்சூழல் அறிவு, புவியியல் புரிதல், இயற்கையின் மீதுள்ள மரியாதை போன்றவற்றின் வெளிப்பாடாக ஐங்குறுநூறு திகழ்கிறது. இவ்வமைப்பை அடிப்படையாகக் கொண்டே ஐங்குறுநூற்றில் இயற்கை வருணனைகள் குறிப்பிடப்பட்டுள்ளதால, ஐந்திணைகளின் அமைப்பை அறிதல் இவ்வாய்விற்கான முதற்கட்ட அடித்தளமாக உள்ளது.

குறிஞ்சி திணை

சங்க இலக்கியங்களில்மலைமற்றும்மலை சார்ந்தபகுதிகளைஅடிப்படையாகக்கொண்ட நிலப்பரப்பாக குறிஞ்சித்திணை விளங்குகிறது. உயர்ந்த மலைகள், அருவிகள், பாறைகள் அடர்ந்த காடுகள, மலைக்காடுகளில் உள்ள மலர்கள், குறவர் குடியிருப்புகள் ஆகியவை இந்நிலத்தின் இயற்கைச் சிறப்புகளாக விளங்குகின்றன. மலைகளில் வாழும் குறவர் மக்கள் குடிசைகளில் வாழ்ந்தனர். அவர்கள் இயற்கையோடு இணைந்து மலையின் அழகை ரசித்து வாழ்ந்தனர் என்பதை குறிஞ்சித் திணைப்பாடல் வரிகள் அழகுற எடுத்துரைக்கிறது. குறவர்கள் வாழும் குடிசை மலைகளில் உள்ளது. அத்தகைய குடிசைகளை மலைகளில் உள்ள மேகங்கள் மறைக்கிறது. இத்தகு அழகிய இயற்கை சூழல் நிறைந்த வாழ்வைஇ

"குன்றக் குறவன் புல்வேய் மும்பை மன்று
ஆடு இளமை மறைக்கும் நாடன"

(ஐங்குறுநூறு-258)

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. குறிஞ்சி நிலம் இயற்கை மற்றும் மனிதனை ஒன்றிணைக்கும் அடையாளமாகக் கருதப் படுகிறது. குறவர் நிலத்திலுள்ள தலைவன், தான் விரும்பும் பெண்ணின் அழகை குறிஞ்சி நிலத்தின் அழகோடு சேர்த்து வர்ணிக்கிறான்.

"குன்றக் குறுவன் காதல் மடமகள்
அணிமயில் அன்ன அசைநடைக்
கொடிச்சி....."

(ஐங்குறுநூறு-258)

தலைவன், தலைவியின் நடையை அழகிய மயிலோடு ஒப்பிட்டுள்ளது. குறிஞ்சி நிலத்தின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

முல்லைத்திணை

முல்லைத்திணை என்பது காடு மற்றும் பசுமை நிறைந்த மேய்ச்சல் நிலப்பரப்பைக் குறிக்கிறது. அடர்ந்த மரங்கள், கொடிகள், பசும்புல் பரப்புகள், சிற்றாறுகள், மாடுகள் மேயும் வெளிகள் ஆகியவை இந்நிலத்தின் இயற்கைச் சின்னங்களாகும். இங்கு வாழும் மக்கள் ஆயர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவ்வாழ்க்கை வேகமற்ற இ அமைதியான மற்றும் இயற்கையின் ஓட்டத்தோடு நகரும் வாழ்க்கையாகும். தலைவன் பொருளீட்ட சென்று திரும்பும் வரை தலைவி பொறுமையுடன் காத்திருப்பது முல்லைத்திணையின் முக்கிய உணர்வாக அமைகிறது. தலைவன் தலைவியின் வாழ்க்கை நிகழ்வுகளை முல்லைத்திணை கருப் பொருட்களோடு இணைத்து வர்ணித்துள்ளனர்.

"மறியிடைப் படுத்த மான்பிணைப் போலப்
புதல்வன் நடுவண னாக நன்றும்
இனிது மன்றஅவர் கிடக்கை முனிவின்றி
நீல்நிற வியலகம் கவைஇய
ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே"

(ஐங்குறுநூறு-401)

என்றபாடலில், கன்றைநடுவில்உறங்கவைத் திருக்கும் மான் பிணைகள் போல மகவை நடுவில் படுக்க வைத்திருக்கும் தலைவியின் செயலை, செவிலி நற்றாயிடம் கூறுவது போல் முல்லைத்திணை கருப்பொருளோடு இணைத்து வர்ணித்துள்ளனர்.

மருதத்திணை

மருதத்திணை என்பது ஆறுகள், வயல்வெளிகள், பாசன கால்வாய்கள், நெற்பயிர்கள், குடியிருப்புகள், ஆகியவற்றால் சூழப்பட்ட வளமான சமவெளி பகுதியைக் குறிக்கிறது. சங்க கால சமூகத்தின் பொருளாதார அடித்தளம் இந்நிலத்திலேயே அமைந்திருந்தது. உழவுத்தொழில், அறுவடை, குடும்ப வாழ்க்கை ஆகியவை மருதநில மக்களின் வாழ்வியலின் மையமாக விளங்கின இத்திணையில் மனிதன் இயற்கையைத் தன் வாழ்க்கைக்கேற்ப பயன்படுத்தினாலும், இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். ஐங்குறுநூற்றிலுள்ள மருதத் திணையைப் பாடிய ஓரம்போகியார் தலைவன் தலைவியின் களவு வாழ்க்கை நிகழ்வுகளை மருதத்திணை வளங்களோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். தலைவனின் பரத்தையிற் பிரிவால் தலைவி வருந்துகிறாள். இதனால் அவளின் கை வளையல்கள் கழன்று விழுகிறன. இந்நிலையை ஓரம்போகியார் இவ்வாறாக மருதத்திணை வளத்தோடு ஒப்பிடுகிறார்.

"அறுசில் கால அஞ்சிறைத் தும்பி
நாற்றிதழ்த் தாமரைப் புச்சினை சீக்கும்
காம்பு கண்டன்ன தூம்பு உடை வேழத்துத்
துறை நணி ஊரனை உள்ளியென்
இறை ஏர்எல் வளை நெகிழ்பு ஓடும்மே"

(ஐங்குறுநூறு-20)

பிரிந்து சென்ற தலைவனை நினைத்து வருந்துவதால் தலைவியின் கைவளையல் கழன்று விழுவதை, தாமரை மலரின் இதழ்களில் நாணல் உரசுவதால், அவ்விதழ்களிலுள்ள தும்பியின் முட்டைகள் அழிகிறது என்ற மருத நில சூழலோடு ஒப்பிட்டு கூறுவது அம்மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வை நினைப்புட்டுவதோடு மட்டுமல்லாமல் விவசாய நாகரிகத்தின் செழிப்பையும் சமூக உறவின் அமைப்பையும் எடுத்துரைக்கிறது.

நெய்தல் திணை

கடல் மற்றும் கடல் சார்ந்த சூழலைக் குறிப்பது நெய்தல் திணை ஆகும். அலைகள், படகுகள், மீன்பிடி தொழில், உப்பு தயாரித்தல், கடல் வணிகம், மற்றும் நெய்தல் நில பறவைகள் ஆகியவை இந்நிலத்தின் அடையாளங்களாகும். பிரிவால் உண்டாகும் கவலையும் காத்திருக்கும் இந்நிலத்தின் மனவியல் அம்சங்களாகும.

நெய்தல் நில கருப்பொருட்களையும் நிகழ்வுகளையும் தலைவன் தலைவி வாழ்வோடு ஐங்குறுநூற்றில் ஒப்பிடப்பட்டுள்ளது. கடலுக்கு அருகிலுள்ள பனை மரத்தில் கடல்நாரை தங்கி ஒலித்தல், கடற்கரையிலுள்ள சிறுவெண்காக்கை தனக்கான இரையை உண்டு கருமையான கொம்புகளையுடைய புன்னை மரத்தில் தங்குதல் போன்ற இயற்கையான செயல்களை தலைவனின் செயல்பாடுகளோடு பொருத்தி உள்ளுறைச் செய்தியாக அழகுற புனையப்பட்டுள்ளதை,

"கடலின் நாரை இரற்றும்
மடல்அம் பெண்ணை அவனுடை நாட்டே?"
(ஐங்குறுநூறு 114:3இ4)

என்ற பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றன. மேலும், நெய்தல் நிலத் தலைவி தலைவனைக் காணாமல் வருந்துவதை கல்லில் மோதிய சிறு நுரையைப் போல் தன் மனம் துன்பமெனும் கல்லில் மோதி வருந்துவதாக

எக்கர் மாஅத்துப் புதுப்பும் பெருள்சினை
புணர்ந்தோர் மெய்ம்மணல் கமழும்
தண்பொழில்
வேழ வெண்பு வெள்ளுளை சீக்கும்
ஊரன் ஆகலின் கலங்கி
மாரி மலரிற் கண்பனி யுகுமே
(ஐங்குறுநூறு.பா.19)

என்ற பாடல் வரிகள் நெய்தல் நில இயல்பை தலைவியின் நிலையோடு ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

பாலைத்திணை

பாலைத்திணை இயற்கை மாற்றத்தால் உருவான வறண்ட சூழலைக் குறிக்கிறது. வெப்பம், மணல்வெளி, காய்ந்த மரங்கள, நீரற்ற பாதைகள், கடினமான பயணப்பாதைகள் ஆகியவை இந்நிலத்தின் அடையாளங்களாகும். இது இயற்கையின் மற்றொரு முகத்தை வெளிப்படுத்துகிறது. செழிப்பும் வறட்சியும் இயற்கையின் இரு நிலைகளாக இருப்பதை உணர்த்துகிறது. பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் திரிந்த வடிவம் என்று கூறுவர். மழையில்லாத வறட்சியான பாலை நிலத்துக்கு உரியதாக பாலை மரம் சங்க காலத்தில் வழங்கப்பட்டது.

ஐங்குறுநூற்றில் ஓதலாந்தையார் பாடிய 100 பாலைத்திணைப் பாடல்கள, தலைவன் பொருள் தேடப் பிரிவதையும், தலைவியின் பிரிவு துயரத்தையும் வெப்பமான வறண்ட பாலை நிலப் பின்னணியில் விவரிக்கின்றன. கொடுமையான வெயில், நீர் பற்றிய சுரம், கள்வர் பயம், பசி மற்றும் பறவைகளின் ஓலம் ஆகியவை வழி பயணத்தின் ஆபத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளன. பாலை நிலத்தின் தன்மைகளை ஓதலாந்தையார் பலவாறு பதிவு செய்கிறார். அவற்றுள்,

"மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிண
அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டு"
(ஐங்குறுநூறு 301)

என்னும் பாடல் வரிகளில், பாலை நிலத்தின் வழியாகச் செல்வோர் அதன் வெப்பத்தைத் தணிக்க வெள்ளோத்திர மலரைத் தலையில் சூடிச் செல்வர். இந்த மலர்களை உலர்த்தி, சாந்து போல் அரைத்துப் புசிக் கொள்வது முண்டு. ஓதலாந்தையார் இந்நிலையை தலைவன் தலைவி வாழ்வோடு ஒப்பிடுகிறார். தோழி தலைவனிடம, தலைவனின் பிரிவைத் தலைவி தாங்க மாட்டாள் என்பதை "நீ செல்லக் கருதிய பாலை நிலத்தின் வழியாக செல்வோருக்கு வெள்ளோத்திர மலர் உண்டு. ஆனால் உன் பிரிவால் வாடும் தலைவியின் மனத்துயரைப் போக்க மருந்து இல்லை" என்று பாலை நில கொடுமையை மனித வாழ்வின் உணர்வோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் சிந்தனையும் இன்றைய பொருத்தமும்

ஐங்குறுநூறு சங்க இலக்கியங்களில் இயற்கையோடு இயைந்த வாழ்வைப் பிரதிபலிக்கும் முக்கிய நூலாகும். மனித வாழ்க்கையும் சுற்றுச்சூழலும் ஒன்றோடொன்று இணைந்தவை என்பதைக் காட்டும்

ஆவணமாக இது விளங்குகிறது. இந்நூல் இயற்கையை தேவைக்காக மட்டுமல்ல, அதனோடு இணைந்து வாழவேண்டும் என்ற சிந்தனை வலியுறுத்தப்படுகிறது. நீர்நிலைகளைப் பாதுகாத்து விவசாயம் செய்தல், காடுகளைப் பாதுகாத்தல், கால்நடைகளை பேணுதல் போன்ற இயற்கை வாழ்வியல் முறைகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்த வேண்டும் என்பது அக்கால சமூகத்தின் அடிப்படை ஒழுக்கமாக இருந்தது.

இன்றைய உலகில், சுற்றுச்சூழல் மாசுபாடு, நீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம் போன்ற பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. மனிதன் இயற்கையை தனது பேராசையினாலும், அளவுக்கு மீறி சுரண்டியதன் விளைவாக மனித வாழ்வாதாரமே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில், ஐங்குறுநூறு காட்டும் இயற்கையோடு ஒத்திசைந்து வாழும் பழந்தமிழர் வாழ்க்கை முறை நமக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இயற்கை வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்தும் சூழலியல் சிந்தனைகள் நவீன சமூகத்திற்குத் தேவையான வழிகாட்டுதலாக அமைகின்றன. எனவே, இயற்கையை பாதுகாப்பதே மனித குலத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான முதன்மை கடமையாகும்.

முடிவுரை

ஐங்குறுநூறு வெளிப்படுத்தும் இயற்கை வாழ்வியல் சிந்தனைகள் தமிழரின் உயர்ந்த சூழலியல் அறிவையும், பண்பாட்டுத்திறனையும் எடுத்துரைக்கும் கருவியாக விளங்குகிறது. ஐந்திணைகளின் பாடல்கள் மூலம் நிலத்திற்கேற்ப வாழ்ந்த சமூகத்தின் சூழலியல் அறிவும், பண்பாடும் இதில் பிரதிபலிக்கப் படுகின்றன. மனிதனும் இயற்கையும் ஒன்றோடொன்று சார்ந்தவை என்பதை இந்நூல் நமக்கு வலியுறுத்துகிறது. இறைவன் மனிதனைப் புமியில் படைத்தது, உலகை பண்படுத்தவும் பாதுகாக்கவுமே எனவே, இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்தி ஐங்குறுநூறு காட்டும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையை வாழ்வதே சி றந்த எதிர்காலத்தை உருவாக்கும் என்பதை இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது.

துணை நூற்பட்டியல்

1. பி.எல்.சாமி - சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் திருநெல்வேலி-6 சென்னை-1
2. பொ.வே.சோமசுந்தரனார் - ஐங்குறுநூறு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6 சென்னை-1
3. https:// Share.google
4. https://ta.wikipedia.org
5. https:// Library.cict.in